REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04) 4 PAGES பக்கம் 1

CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION FILM - 20 CLICK - 11 FEBRUARY 2025 ₹. 1

## அறிவிப்பு

60 வயதுக்கு உட்பட்டவர்கள் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில் இணைந்து குடும்ப பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு

**P. துரைபாபு**

CVPA செயலாளர்

# நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு NNT திட்டத்தின் முதல் 1 லட்சம் ரூபாய் உதவி தொகையை பெறும் மறைந்த NNT உறுப்பினர் ஆதம்பாக்கம் சேகர் குடும்பத்தினர்

அன்பான சங்க உறுப்பினர்களுக்கு வணக்கம்!

நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், தற்போது வரை, 649 போட்டோ வீடியோ கலைஞர்களின் குடும்பங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. நமது சங்க உறுப்பினர்களின் நலன் கருதி தொடங்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் ஆயிரத்திற்கும் மேற்பட்ட போட்டோ வீடியோ கலைஞர்களை இணைக்க வேண்டும் என்பதுதான் நமது சங்கத்தின் முதல் நோக்கமாகும். இத்திட்டத்தில் இணையும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமானால் NNT உறுப்பினர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் பணமும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். ஒரு NNT உறுப்பினர் வீட்டில் ஒரு துயர சம்பவம் நடக்கும் போதுதான் அந்த உறுப்பினரின் வீட்டில் உள்ள பொருளாதார பிரச்சனை வெளியில் தெரியவருகிறது. இப்படி, நூற்றுக்கணக்கான நமது கலைஞர்களின் குடும்பம் பொருளாதார பிரச்சனையில் சிக்கித் தவித்த போது, அந்த குடும்பங்களுக்கு நம்மால் முடிந்த உதவிகளை சங்கத்திற்கு அப்பாற்பட்டு செயல்பட்டு வரும் பல்வேறு வாட்ஸ்அப் குழுக்கள் மூலமாக நம்மால் முடிந்த பண உதவி செய்து வந்தோம். இது போதுமான உதவியாக இல்லை என்ற காரணத்தால்தான், நமது சங்கமே நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தை தொடங்கி, இதன்மூலமாக ஒருவருக்கு ஒருவர் உதவும் மனப்பான்மை, சேவை உணர்வு, கொண்ட ஆயிரம் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்தோம். ஆனால், 649 உறுப்பினர்கள் மட்டுமே இதில் இணைந்தார்கள். நம் சங்கத்தில் ரினிவல் செய்பவர்களை கணக்கிட்டுப் பார்த்தால், மூன்றில் ஒரு பங்கு மட்டுமே இது உள்ளது. இதனால் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில் இணைந்த குடும்பத்திற்கு ஒரு லட்ச ரூபாய் மட்டுமே நம்மால் உறுதி செய்ய முடிந்தது. இந்நிலையில் தென் சென்னை எஸ் 2, ஆதம்பாக்கம் பகுதியை சேர்ந்த நமக்குநாமே NNT திட்டத்தின் உறுப்பினர் இம்மாதம் மரணம் அடைந்துள்ளார். இவரை பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு நமது சங்கம் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த குடும்பத்திற்கு நமது சங்கம் சார்பாக வழக்கமாக வழங்கப்படும் ஈமச் சடங்கு தொகை ரூபாய் 20,000 சங்க நிர்வாகிகள் முன்னிலையில் அந்த குடும்பத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இது தவிர நமக்கு நாமே திட்டத்தின் உறுப்பினர் என்கிற முறையில் மறைந்த சேகர் அவர்களின் குடும்பத்திற்கு மேலும் 1 லட்சம் ரூபாயை விரைவில் வழங்க இருக்கிறோம். நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தின் முதல் முறையாக உதவியை பெற்றுக் கொள்ளும் குடும்பம் சேகர் அவர்களுடைய குடும்பம் தான் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். எதிர்மறையான விமர்சனங்களை தவிர்த்து விட்டு NNT திட்டத்தில் நாம் வகுத்து வைத்துள்ள ஆயிரம் உறுப்பினர்களைவெகு (100%) விரைவில் இணைக்க முயற்சிகள் மேற்கொள்வோம். அனைத்து CVPA உறுப்பினர்களும், நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில், ஆயிரம் ரூபாய் செலுத்தி, உடனடியாக இணைய வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு

**துரைபாபு,** செயலாளர்



சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம் பரிந்துரை செய்து அனுப்பியதன் பெயரில், தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர் அசோசியேசன் நிர்வாகிகள் எனது மகனுக்கு ஏ சி எஸ், எம்ஜிஆர் பல்கலைக் கழகத்தில் கட்டணம் ஏதுமின்றி இன்ஜினியரிங் படிக்க ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். இன்று என் மகன் நல்ல படியாக படித்து முடித்து, அவன் தனது இரண்டு வருட மேற்படிப்பு படிப்பதற்காக ஜெர்மனி சென்றுள்ளார். எனவே அவர் சார்பாக எம்ஜிஆர் யுனிவர்சிட்டி கல்லூரிக்கு கடந்த 24.02.2025 எனது மகனுடைய காலேஜ் சர்டிபிகேட் வாங்க போயிருந்தேன். மிக்க மகிழ்ச்சியாய் இருந்தது. எனது மகன் இன்ஜினியரிங் (சி.எஸ்.இ) படிப்பு படித்த இந்த நான்கு வருட காலத்தில், எந்த பணம் செலவு செய்யாமல் என் பையன் நல்லபடியாக படித்து முடித்ததற்கு உறுதுணையாக இருந்த CVPA பாலச்சந்தர் PRO அவர்களுக்கும், முன்னாள் செயலாளர் பிரேம் குமார் அவர்களுக்கும், இன்றைய தலைவர் புருஷோத்தமன் அவர்களுக்கும், மற்றும் செயலாளர் துரைபாபு அவர்களுக்கும், பொருளாளர் கௌரி அவர்களுக்கும் நன்றி மற்றும் TVPA தலைவர் சிவக்குமார் அவர்களுக்கும், மாநில அமைப்பாளர் திரு சரவணன் அவர்களுக்கும் நன்றி நன்றி . இப்படிக்கு, **ஆர்.டி.விஜய்,** நுங்கம்பாக்கம் பகுதி செயலாளர்.

## நலம் கார்டு மூலமாக நமது சங்க உறுப்பினரின் குடும்பத்திற்கு ஏசிஎஸ் மருத்துவமனையில் கட்டணமில்லா சிகிச்சை அளிக்கப்பட்டது

தென் சென்னை எஸ்1, மேற்கு மாம்பலம் பகுதியை சேர்ந்த, நமது சங்க உறுப்பினர், ஐயப்பன் அவர்களுடைய சகோதரர் சிறுநீரக வீக்கம் மற்றும் சிறுநீரகக் கல் போன்ற பிரச்சனைக்காக ACS மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். இவருக்கு நமது சங்கத்தின் சார்பாக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள **நலம் கார்டு மூலமாக கட்டணம் இல்லா மருத்துவ சிகிச்சை**யின் வாயிலாக, இரண்டு நாட்கள் தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டது. நமது சங்க பீ.ஆர்.ஓ. பாலச்சந்தர் அவர்கள் மருத்துவமனைக்கு நேரில் சென்று அவருக்கு மருத்துவ ரீதியான உதவிகளை செய்து கொடுத்தார். அவர் நலமுடன் வீடு திரும்ப சங்க நிர்வாகம் ஏற்பாடு செய்து கொடுத்தது.



தென் சென்னை எஸ் 2 ஆதம்பாக்கம் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு.சேகர் அவர்கள் இம்மாதம் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். நமது சங்க நிர்வாகிகளும், பொதுக்குழு உறுப்பினர்களும் அன்னாரின் இறுதி அஞ்சலியில் கலந்து கொண்டு அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். இதனைத் தொடர்ந்து நமது சங்க பொதுக்குழு தீர்மானப்படி, மறைந்த சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை ரூபாய் 20,000, மறைந்த சேகர் குடும்பத்தினரிடம் 18.02.25 அன்று தலைவர் புருஷோத்தமன், செயலாளர் துரைபாபு, பிஆர்ஓ. பாலச்சந்தர், துணைத் தலைவர் ஜெயக்குமார் இணைச்செயலாளர் ராதாகிருஷ்ணன். மடிப்பாக்கம் பகுதிச் செயலாளர் சுரேஷ் மற்றும் ஆதம்பாக்கம் பகுதியை சேர்ந்த பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது. மேலும் சேகர் அவர்கள் நமக்கு நாமே திட்டத்தில் (CVPA NNT) உறுப்பினராக சேர்ந்த ஒரு மாதத்தில் இந்த துயர சம்பவம் நடந்துள்ளதால், அவருடைய குடும்பத்தினருக்கு சேர வேண்டிய ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்பட உள்ளது.
















கடந்த 14.02.2025 அன்று சோனி நிறுவனம் சார்பில் SONY FX 30 கேமரா குறித்து ஒரு நாள் இலவச பயிற்சி வகுப்பை சென்னை அண்ணா சாலை எஸ்.வி.எஸ் கிளப்பில் நடத்தியது. இந்த பயிற்சி வகுப்பில் நமது சங்கத்தை சேர்ந்த, ஏராளமான சோனி கேமரா யூசர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். நமது சங்க நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்ற இந்த பயிற்சி வகுப்பை சோனி கிஷோர் மற்றும் முஸ்தபா ஆகியோர் முன்னிருந்து நடத்தினார்கள். நமது சங்கத்தின் சார்பாக இவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.




மத்திய சென்னை, மதுரவாயில் பகுதி செயலாளர், திரு.சேகர் அவர்களின் மகன் திருமண விழாவில் நிர்வாக குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



நமது சங்கத்தின் மயிலாப்பூர் பகுதி செயலாளர் திரு. ஹரிஹரன் என்கிற பழனி இல்ல திருமண வரவேற்பு விழாவில் தலைவர் புருஷோத்தமன் தலைமையில் நமது சங்க நிர்வாகிகளும் செயற்குழு உறுப்பினர்களும், பொதுக்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை, பட்டாளம் பகுதியைச் சேர்ந்த, திரு.விஜய சாரதி அவர்களின் புதுமனை புகுவிழாவில் தலைவர் புருஷோத்தமன், செயலாளர் துரைபாபு ஆகியோருடன் நமது சங்க நிர்வாக குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.



வடசென்னை கொடுங்கையூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு.அருண் அவர்களின் AJ Rental Space ன் புதிய ஸ்டூடியோ திறப்பு விழாவிற்கு (21.02.2025) சங்கத்தின் சார்பில், தலைவர் புருஷோத்தமன், செயலாளர் துரைபாபு, வடசென்னை துணைத் தலைவர் கவுஸ் பாஷா, வடசென்னை இணைச் செயலாளர் பிரபாகரன், தண்டையார்பேட்டை பகுதி செயலாளர் மதன், வண்ணாரப்பேட்டை பகுதி செயலாளர் சுரேஷ், கொடுங்கையூர் பகுதி செயலாளர் கா ராஜேஷ், மற்றும் நமது சங்க உறுப்பினர்களும் திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.



மத்திய சென்னை, புளியந்தோப்பு பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர்,திரு. சைமன் சுதாகர் – திருமதி. சோபியா சரண்யா இவர்களின் செல்ல மகள் எஸ். டிரினிடா நான்சியின் முதலாம் ஆண்டு(17.02.2025) பிறந்தநாள் விழாவில் நமது சங்கத்தின் சார்பாக செயலாளர் துரைபாபு, துணைத் தலைவர் வேலு, இணைச் செயலாளர் சீனிவாசன், பட்டாளம் பகுதி செயலாளர் திலீப் ஆகியோர் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு குழந்தையை வாழ்த்தினார்கள்.

Regd No. : 446/96

# சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்

எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002. Cell : 7824034734
E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in

# நமக்கு நாமே
# குடும்ப நல பாதுகாப்பு திட்டம்

## சென்னை வீடியோ போட்டோ கலைஞர்களின் குடும்ப நலன் கருதி

## CVPA உருவாக்கியுள்ள நமக்கு நாமே திட்டத்தில்

## இன்றே இணைந்து உங்கள் குடும்ப பாதுகாப்பிற்கு

# 2 லட்சம் ரூபாய்

(*நிபந்தனைக்கு உட்பட்டது)

மேலும் விவரங்களுக்கு

| தலைவர் | செயலாளர் |
|---|---|
| V. புருஷோத்தமன் | P. துரைபாபு |
| 7010936732 | 92821 64723 |

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351